வேலூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4377/ஆ3/2023 நாள்.19.03.2024

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2022 – 2023ஆம் கல்வி ஆண்டில் அரசு பள்ளிகளில் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்– சார்பு |
| பார்வை | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.டி2/5376/2022 நாள்.18.03.2024 |

-----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 2022 – 2023 ஆம் கல்வி ஆண்டில் பயின்ற பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை பெற்று வழங்கும் பொருட்டு கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. வங்கி கணக்கு இல்லாத மாணவிகளுக்கு ஆதாருடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கினை துவங்க வேண்டும்.
2. மாணவிகளின் வஙகி கணக்கில் ஆதார் எண்ணை இணைக்க பின் அவ்வங்கி கணக்கில் Direct Benefit Transfer (DBT) ஐ enable செய்ய வங்கியில் அறிவுறுத்த வேண்டும்.
3. 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான eKyc Unverified மாணவிகளின் விவரங்களை இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் தன்னார்வலர்கள் உதவியுடன் Face Authentication மூலம் மாணவியர்களின் ஆதார் அட்டையில் உள்ள விவரங்கள் அடிப்படையில் TNeGAன் தரவுகளில் Update செய்ய வேண்டும்.
4. மாணவிகளின் கைரேகை மற்றும் விழி பதிவு செய்யப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலிருப்பின் Bio Authentication செய்ய வேண்டும். அவ்வாறு Bio Authentication செய்ய வேண்டிய மாணவிகளுக்கு தங்கள் பள்ளிகளில் ELCOT மூலம் CAMP நடத்தி Bio Authentication செய்தல் வேண்டும்.

5. Ekyc Unverified மற்றும் NPCI Failure இல் நிலுவையில் உள்ள மாணவிகளின் விவரங்களை பள்ளியில் உள்ள தகவல் பலகையில் ஒட்டி மாணவிகளுக்கு வங்கி கணக்கினை சரிசெய்ய அல்லது ஆதார் விவரங்களை சரிசெய்ய பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.
6. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள பத்து மாணவிகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் தொடர்பு அலுவலராக (Nodel Officer) நியமித்து மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை கிடைக்க உரிய நடவடிக்கைகளை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேலும் இப்பணிகளை உடனடியாக மேற்கொண்டு 31.03.2024–க்குள் சார்ந்த மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படவில்லையெனில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களே முழுப்பொறுப்பு ஏற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் –9.

பெறுநர்
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.
நகல்.
வேலூர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.